# பெரும்பாணாற்றுப்படையில் பயணக் கூறுகள்

# Travel Components in Perumpanatruppadai

**அ.திலகவதி**, ஆய்வியல் நிறைஞர், கோயம்புத்தூர் – 641046

**A.Thilagavathi**, Researcher, Coimbatore – 641046

**முனைவர் ம.சிவபாலன்,** உதவிப் பேராசிரியர், மொழித்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்- 641006

**Dr Sivabalan M,** Assistant Professor, Department of Languages, Sri Ramakrishna College of Arts and Science, Coimbatore – 641006

ORCiD: https://orcid.org/0000-0002-3976-7706

**DOI : 10.5281/zenodo.8109846**

## Abstract

The fourth book of the ten-fold books is Perumpanaartuppa. Uruthirakannanar of Kadiyalur sings that night is comforted by Thondaiman Ilanthirayan. 500 ft. It is called the Great Army because it pacified the great Jaffna. Also known as Panar. Perumpanan, who traveled to get rid of the poverty situation, while pacifying the opposing Panan, along with the life stories of the people who lived in the Sangam period, the natural beauty and the prosperity of the towns are presented in a refined manner. Sangha literature helps a lot to understand the society of that time as literature is often used as a mirror to show the times. Apart from the purpose of pacification of Panan, the living conditions of the people of Thanechar and the special features of the area traveled can be known through this literature. Also, many books mention the ways that people used to travel at that time. This article is to explain the travel elements found in the great classical army which has a unique character in the shape level.

## ஆய்வுச்சுருக்கம்

பத்துப்பாட்டு நூல்களில் நான்காவது நூலாக அமைந்தது பெரும்பாணாற்றுப்படை. இரவலனைத் தொண்டைமான் இளந்திரையனிடம் ஆற்றுப்படுத்துவதாகக் கடியலூர் உருத்திரக்கண்ணனார் பாடியது. 500 அடிகளைக் கொண்டது. பெரிய யாழ்ப்பாணனை ஆற்றுப்படுத்தியதால் பெரும்பாணாற்றுப்படை எனப்படுகிறது. பாணாறு என்றும் சிறப்பிக்கப்படுகிறது. வறுமை நிலையைப் போக்கிக் கொள்வதற்காக பயணம் மேற்கொண்ட பெரும்பாணன், எதிர்ப்பட்ட பாணனை ஆற்றுப்படுத்துகையில் சங்க காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் செய்திகளோடு, இயற்கை அழகையும், ஊர்களின் செழிப்பினையும் செம்மையான முறையில் கண் முன்பு காட்சிகளாகத் தோன்றும் விதமாக அமைந்துள்ளது.

இலக்கியங்கள் பெரும்பாலும் காலத்தைக் காட்டும் கண்ணாடியாக விளங்கும் வகையில் சங்க இலக்கியம் அக்காலச் சமூகத்தினை அறிந்துகொள்ள பெரிதும் உதவிபுரிகின்றது. பாணனை ஆற்றுப்படுத்தும் நோக்கம் மட்டுமே இல்லாமல் திணைசார் மக்களின் வாழ்வியல் சூழல்களையும் பயணம் மேற்கொண்ட பகுதியின் சிறப்புகளையும் இவ்விலக்கியத்தின் வழியே அறியமுடிகிறது. மேலும் அக்காலத்தின் பயணத்திற்கென்று மனிதர்கள் பயன்படுத்திய வழிகளையும் ஆற்றுப்படை நூல்கள் எடுத்தியம்புகின்றன. பாணாற்றுப் படையில் தனிப்பெரும் தன்மையினை வடிவ அளவில் கொண்டிருக்கும் பெரும்பாணாற்றுப்படையில் காணப்படும் பயணக்கூறுகளை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**Keywords** : பாணாற்றுப்படை, ஆற்றுபடை, பயணம், பயண இலக்கியம், இக்கால இலக்கியம், Panatruppadai, Atruppdai, Payanam, Payana Ilakkiyam, Modern Literature

**முன்னுரை**

ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம்பெயர்வது என்பது அனைத்து உயிர்களுக்கும் பொதுவான ஒன்றாகக் கருதப்படுகிறது. மனித சமுதாயமும் முன்னர் காலத்தில் அவ்வாறே தங்களின் வாழ்க்கையை கழித்து வந்தனர் என்பதும் அறிஞர்களால் உறுதிசெய்யப்பட்டுள்ளது. அந்தப் பயணமானது சிற்றிலக்கியங்களின் கண் கூறப்படும் தூது என்ற மரபிலும் அமையப்பெறும். பிரிவின் வகைகளாக ஓதல், பகை, தூது என்று தொல்காப்பியர் வகைப்படுத்துகின்றார். அவ்வகையில் காணும் போதும் பொருட்வயிட் பிரிவின் போது இடம் பெயர்தல் என்பது நிகழ்கின்றது. மற்றொரு இடத்திற்கு மனிதனோ அல்லது மற்ற உயிரினங்களோ செல்லும் போது ஏற்படும் நிகழ்வே பயணம் என்று அழைக்கப்படுகிறது. பயணத்தின் வழியே பல்வேறு அனுபவங்களைக் கற்றுக்கொள்ள முடிகிறது. இலக்கியங்களில் பயணம் என்பதும், தான் கண்ட காட்சிகளை மற்றவருக்கு எடுத்துரைக்கும் நோக்கிலும் இவை என்றைக்கும் தனித்தன்மையானதாகக் காணப்படுகிறது. சங்க இலக்கியத்தின் பெரும்பாணாற்றுப்படையில் காணப்படும் பயணம் குறித்த செய்திகள், அதனால் ஏற்பட்ட விளைவுகள் போன்றவை கூறப்பட்டுள்ளன என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**பெரும்பாணாற்றுப்படை**

தொண்டைமான் இளந்திரையனிடம் பரிசில் பெறுதல் பாணனின் பயண நோக்கமாக இருந்தாலும், பயணித்த இடங்களைப் பற்றியும், பார்த்த காட்சிகளைப் பற்றியும், அழகுற எடுத்துக்காட்டியுள்ளார் கடியலூர் உருத்திரக்கண்ணனார். யாழ் வருணனை, வேனில் கால வெம்மை, பாணனின் வறுமை நிலை, பரிசு பெற்றவன் தான் பெற்ற பரிசுப் பொருட்கள் இவை எனக் கூறுதல், இளந்திரையனின் சிறப்புகள், ஆணைச் சிறப்பு, உப்பு வணிகரின்

பயணம், காட்டு வழியின் இயல்பு, எயிற்றியர் வாழ்வியல், புல்லரிசி எடுத்தல், எயிற்றயரின் உபசரிப்பு, கானவர்களின் வேட்டை, விருந்தோம்பல், குறிஞ்சி நிலச் சிறப்பு அம்மக்களின் விருந்தோம்பல். முல்லை நிலச் சிறப்பு, ஆயர்களின் வாழ்வியல், மருதநிலச்சிறப்பு உழவர், வலைஞர், அந்தணர் வாழ்வியல், நீர் பெயற்றுத் துறையின் சிறப்பு, இளந்திரையனின் வெற்றித் திறம், கொடைச் சிறப்பு முதலான செய்திகள் இடம்பெற்றுள்ளன.

**செல்லும் வழியின் இயல்பு**

இளந்திரையன் காவல் அமைந்த பெரிய நாட்டின் வழியே போவாரை அவர்கள் அலறும்படி கொன்று பொருளைக் கொள்ளையிடும் களவினை உழவுத் தொழில் போல் செய்து வாழும் கொடியவர் இல்லை.

**"உருமும் உறராது அரவும் தப்பா**

**காட்டு மாவும் உறுகண் செய்யா"** (பெரும் 42-43)

இடியானது இடித்து துன்புறுத்தாது பாம்புகள் கொல்லுதலைச் செய்யாது, விலங்கினங்கள் துன்பம் செய்யாது, அதனால் நீ விரும்பியபடி தங்கி இளைப்பாறிச் செல்லலாம் என்று வழியின் இயல்பை சுட்டுகிறான் பாணன்.

**போக்குவரத்துச் சாதனம்**

மத்தளம் போன்ற முழு மரத்தை அறுத்து வடிவாகச் செய்யப்பட்ட சக்கரத்தையும், இரண்டு கணையங்களையும், பருமனான இணைப்புச் சட்டத்தையும், பனை ஓலையினால் வேயப்பட்ட மேல்புறத்தையும் கொண்டது. உப்பு வணிகனின் சகடம்(வண்டி)

**"கோட்டினர் வேம்பின் ஏட்டிலை மிடைந்த**

**புடலைக் கண்ணிய பரேலரறுழ்த் திணிதோள்**

**முடலை யாக்கை முழுவலி மாக்கள்**

**சிறுதுளைக் கொநுசும் நெறிபட நிரைத்த"** (பெரும் 59-62)

வேப்ப மரத்தின் தழையினை இடையிடை வைக்கப்படும்? பிற தழைகளையும் கொண்ட மாலையினையும், துளைகளையுடைய நுகத்தடியில் கயிற்றினைக் கொண்டு தாளைகளைச் சேர்த்து கட்டி உப்பு வண்டிகளின் அருகில் நின்றனர். உப்பு வாணிகத்தைப் பற்றியும் உப்பு வாணிக வண்டிகளைப் பற்றியும் புறநானூற்றின் பாடல் கீழ்வருமாறு சுட்டுகிறது.

**"உப்பு முகந்து கல்நாடு மடுக்கும்**

**ஆரைச் சாகாட்டு ஆழ்ச்சி போக்கும்**

**உரனுடைய நோன்பகட்டு அன்ன எங்கோன்**

**வலன்இரங்கு முரசின் வாய்வாள் வளவன்**

**வெயில்மறைக் கொண்ட உருகெழு சிறப்பின்**

**மாலை வெண்குடை ஒக்குமால் எனவே"** (புறம். 60)

கடற்கரையில் வளைந்த உப்பு மூட்டைகளை ஒற்றிக் கொண்டு மலைநாடு நோக்கிச் செல்லும் பார வண்டிகளை மேடு பள்ளங்களில் மூக்கு ஊன்றியும், தவழ்ந்தும் இழுத்துச் செல்லும் காளை போன்றவள் மன்னன் என்பதை சுட்டுகிறது.

வாணிகம் செய்ய சாலைகளைப் போக்குவரத்துச் சாதனமாகப் பயன்படுத்தியுள்ளனர் என்பதற்கு இப்பாடல் சான்று பகிர்கிறது.

**பாலைநிலப் பயணம்**

உப்பு வண்டிகளும் கழுதைகளும் செல்லும் வழிகள் இணைகின்ற பாதையில் சாவடிகளிலிருக்கும், அவற்றில்

**"உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்**

**வில்லுடை வைப்பின் வியங்காட் டியவின்"** (பெரும் 81-82)

அரசனால் அமர்த்தப்பட்ட அதிகாரிகள் வணிகரிடமிருந்து சுங்கம் வசூலிப்பார். அந்தச் சுங்கச் சாவடிக்கு அப்பால் எயினர்களின் குடியிருப்புகள் அமைந்திருந்தன.

**" வேந்தலை யன்ன வைந்நுதி நேடுந்தகர்**

**ஈத்திலை வேய்ந்த எய்ப்புறக் குரம்பை"** (பெரும் - 87 -88)

எயினர்களின் குடியிருப்பானது ஈந்தின் ஒலையால் வேயப்பட்டு, முள்ளம் பன்றியின் முதுகு போன்ற அமைப்புடையதாகக் காணப்பட்டது.

**குறிஞ்சி நிலப் பயணம்**

குறிஞ்சி நிலத்து வீரர்கள் வீரவுணர்ச்சி உடையவர்கள் இந்நிலத்தின் தலைவன் பகைவர் நாட்டில் உள்ள விலங்கை குறிவைத்து தப்பாமற் பிடிக்கின்ற வேட்டை நாயைப் போற் செல்லக் கூடியவன்.

**"அகலுள் ஆங்கண்கழி மிடைந்து இயற்றிய**

**புல்வேய் குரம்பைக் குடிதொறும் பெறுகுவீர்"** (மலைபடு.438-439)

பகைவர் நாட்டு ஆணிரையைக் கவர்ந்து வந்து கள்ளுக்கு விலையின் கொடுப்பான். வீட்டில் வடிக்கப்பட்ட கள்ளினை உண்பான். ஊர் மன்றத்தில் கிடாயை அறுத்து சமைத்து உண்பான். மத்தளங்கொட்ட இடது தோளை வளைத்து மகிழ்ச்சியோடு ஆடுவான்.

**"சிலைநவி லேறுழ்த்தோ ளோச்சிவ லன்வளைபூஉ**

**பகன்மகிழ் தூங்குர் தூங்கா இடுக்கை**

**முரண்டலை கழிந்த பின்றை மறிய"** (பெரும் - 145- 147)

குறிஞ்சி நிலமக்களுடைய வீரமும், உணவும், பொழுது போக்கு போன்ற காட்சிகள் குறிஞ்சி நிலத்துப் பயணக் குறிப்பாக இடம் பெற்றுள்ளது.

**முல்லை நிலப் பயணம்**

குறிஞ்சி நிலத்தைச் கடந்து சென்றால் முல்லை நிலத்து ஊர்களைத் காணலாம்.

**"செற்றை வாயிற் செறிகழிக் கதவிற்**

**கற்றை வேய்த்த கழித்தலைச் சாம்பின்**

**அதளோன் துஞ்சுங் காப்பின் உதள**

**நெடுந்தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றிற்"** (பெரும் 149-152)

குறுகிய தடிகளைக் கால்களாக கொண்டு அவற்றின் மீது வீடுகள் கட்டப்பட்டிருக்கும். அந்தக் கால்களில் ஆடுகள் தழைகளைத் திண்ணும்படி கட்டப்பட்டிருக்கும் கதவுகள் கயிற்றால் வரியைப்பட்டு இருக்கும் வரகு வைக்கேல் இவற்றின் மீது கிடாயின் தோளினைப் போட்டு வைத்திருப்பர் அதன் மேல் முதியவர் படுத்திருப்பான். வேலியின் பக்கத்தில் வெள்ளாடும் செம்மறியாடும் படுத்திருக்கும் காட்சியை ஆயர்களின் வீடுகளில் காணமுடியும்.

மலைபடுகடாமில் முல்லை நில மக்களுடைய வாழ்விடத்தைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**"மெய் உரித்து இயற்றிய மிதி அதட்பள்ளி**

**தீத் துணையாகச் சேந்தனிர் கழிமின்"** (மலைபடு. 419-420)

சவ்வாது மலையில் வாழ்ந்த ஆயர் ஆட்டுத் தோல்களை ஒன்றாகத் தைத்துப்படுக்கையாகப் படுத்திருந்தனர். நெருப்பினை இட்டு விலங்குகள் அண்டாதபடி அவர்களைப் பாதுகாத்துக் கொண்டனர்.

**மருத நிலம் பயணம்**

ஆயர்கள் வாழக் கூடிய முல்லை நிலத்தைக் கடந்து சென்றால் வயல் நிறைந்த மருத நிலத்து ஊர்களைக் காணமுடியும். உழவர் விளைவித்தப் பயிர்கள் நன்குவிளைந்து காட்சியளிக்கும்.

**"வளரினம் பிள்ளை தழீஇக் குறுங்காற்**

**இறையணத் குறும்பூழ் சாட்சிச் சேக்கும்**

**வன்புல பிறந்த பின்றை மேன்றேல்**

**மதியுலைக் கொல்லல் முறிகொடிற் றன்ன"** (பெரும் - 204 -207)

அந்நிலத்தில் வாழ்ந்த காடைகள் தன் குஞ்சுகளோடு முல்லை நிலத்திற்கு சென்று தங்கிவிடும். கோரைப் புல்லை உண்ணும் எருதுகள் நண்டுகள் அழியக் கூடிய அளவிற்கு ஒன்றோடொன்று போரிட்டுக் கொள்ளும், அந்த அளவிற்கு செழிப்பானப் பகுதியாக மருதநிலம் இருந்துள்ளது.

**துறைமுகப்பட்டினம்**

மேற்றிசை நாடுகளிலிருந்து குதிரைகளையும் வடதிசைப் பண்டங்களையும் கொண்டுவந்த கப்பல்கள் ஆப்பரிக்கும் விதமாக துறைமுகமானது காட்சி அளிக்கும். வீடுகளில் விளை பொருள்கள் நிறைந்து காணப்படும்.

**" வான்தோய் மாடத்து வரிப்பந்து அசைஇ**

**கை புனை குறுந்தொடி தத்த பைபய**

**மூத்த வார் மணல் பொற்கழங்கு சூடும்**

**பட்டின மருங்கின் அசையின் முட்டுஇல்"** (பெரும் -333-336)

உயர்ந்த மாடங்களில் மயில் போன்ற சாயலை உடைய பெண்கள் உலாவிக்கொண்டு இருப்பர். அவர்களுடைய காற்சிலம்பானது இன்னிசையினை ஒலிக்க பந்தாடி மகிழ்வர் கைவளைகள் அசையிம்படி கழங்கு விளையாடுவர். பண்டைய கால மக்களுடைய விளையாட்டுக்கள் பற்றிய குறிப்ப்ய் இங்கு சுட்டப்படுகிறது.

பட்டினப்பாலையில் நீர்ப்பெயற்றுத்துறை பற்றியும் அயல்நாட்டில் இருந்து இறக்குமதியான பொருட்கள் பற்றியும் பின்வருமாறு சுட்டப்படடுள்ளது.

**"வெளி லிளக்கும் களிறு போலத்**

**தீம் புகார்த் திரைமுன்றுறைத்**

**தூங்கு நாவாய் துவன் றிருக்கை**

**மிசைக் கூம்பின் நசைக் கொடியும்"** (பட்டினப்பாலை 172-175)

தொண்டை நாட்டில் உள்ள நீர்ப்பெயற்றுத் துறையில் வெள்ளிய தலையபட்டத்தையுடைய குதிரைகளையும் வட நாட்டு நுகர்பொருள்களையும் ஏற்றிய நாவாய்கள் நிரம்பியிருந்தன.

**நெய்தல் நிலப் பயணம்**

துறைமுகத்தில் மிக உயரமானதும் வைக்கோல் கற்றை முதலியவற்றhல் வேயப்பட்டதுமான உயா;ந்த மாடணு;களை நேய்தல் நிலத்தில் காணலாம். திசையறியாத கலங்கட்குக் கரை இங்கிருக்கிறது என்று பரிந்துறைக்கும் படியாக விளக்குகள் வைக்கப்பட்டிருக்கும்.

**“திரள் அரைப் பெண்ணை நுங்கொரு பிறவும்**

**தீப்பல் தாரம் முனையின் சேம்பின்**

**முளைப் புற முதிர் கிழங்கு ஆர்டுவிர்”** **(பெரும் - 360 – 362)**

இவற்றைக் கடந்து பயணம் செய்தால் தென்னங்கீற்றால் வேய்ந்த கூரையையும் மஞ்சள் செடிகளையும் கொண்ட வீட்டினைக் காணலாம். அங்கு இளநீர், வாழைப்பழம், பனைநுங்கு, முற்றின வள்ளிக் கிழங்குகள் முதலியவற்றை உணவாக உண்ணலாம். நெய்தல் நிலத்தினுடை தோற்றம் மற்றும் அம்மக்களுடைய உணவு வகைகள் போன்றவற்றை காணமுடிகிறது

**பிறநாடுகள்**

துறை முகத்திற்கு அப்பால் பல ஊர்கள் இருக்கும். அங்கே வானளவு உயர்ந்த மாடங்கள் இருக்கும். அவற்றைச் சுற்றி குளிர்ச்சி பொருந்திய மரங்கள் நிறைந்து காணப்படும். அவ்வூரைக் கடந்து மேலும் பயணம் செயதால் யானையானது கிடந்தாற் போலப் பாம்பணையில் திருமால் பள்ளி கொண்டுள்ள திருவெஃகாவை அடையலாம்.

**திருவெஃகாவின் சிறப்பு**

திருவெஃகாவில் நெருக்கமாக வளர்ந்த இளமரச் சோலைகள் காணப்படும். குருக்கத்திக் கொடியின் பூக்கள் நீர்நிறைந்த குழிகளில் விழுந்து கிடக்கும். அக்காட்சியானது

**“காரசற் கூவியர் பாகொடு பிடித்த**

**இழைசூழ் வட்டம் பால்கலர் தவைபோல்**

**நிழல்தாழ் வார்மண னீர்முகத் துறைப்பப்”** **(பெரும் - 377 -379)**

வாணிகர் சுட்ட அப்பம் பாலிற் கிடந்தது போலத் தோன்றும். நீருள்ள அப்பொழில்களில் மகளிர் நீராடி விளையாடுவர் அவர்கள் நெற்றி இளம்பிறை போல் இருக்கும்.

திருவெஃகா சோலையில் உள்ள குளங்களும், அங்கே இளைப்பாறி விட்டு யாழை மீட்டி திருவெஃகாவிலுள்ள பரந்தாமனை வணங்கி விட்டு அங்கிருந்து பயணம் மேற்கொள்ளுங்கள் என்று பாணன் இளைப்பாறும் விதத்தைக் கூறுவதோடு வைணவ

சமயக்கடவுளாகப் போற்றப்படும் திருமாலைப் பற்றிய சமயக்கருத்தையும் பேரும்பாணாற்றப்படையில் பதிவு செய்துள்ளார்.

**காஞ்சி மாநகர்**

காஞ்சியானது மிகப் பழமையான ஊர் அங்கே சோலைகள் நிறைந்து காணப்படும்.

**“கடுஞ்சூழ் மந்தி கவருங் காவிற்**

**களிறுகத னடக்கிய வெளியிற் கந்தின்**

**திண்டேர் குழித்த குண்டுநெடுந் தெருவிலற்” (பெரும் - 395 -397)**

சோலையில் உள்ள சூல்கொண்ட மந்திகள், பரிக்கோலை கையில் தாங்கிய யானைப்பாகர் சோர்ந்திருக்கும் போது நெய்யுடன் கலந்து யானைக்காக வைக்கப்பட்ட அரிசியைத் திருடிச்செல்லும் தேர் ஓடும் அகன்ற தெருக்களைக் கொண்டது காஞ்சி மாநகர். செங்கற்களால் கட்டப்பட்ட மதில்கள் காணப்படும்.

**“மலர்தலை கூலகத் துள்ளும் பலர்தொழ**

**விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர்” (பெரும் - 410 -411)**

பல்வேறு சமயத்தவர் தொழும்படியான சிறப்பினையுடையதாக காஞ்சி மாநகர் விளங்கியுள்ளது.

**இளந்திரையனின் சிறப்பு**

தருமன் முதலிய ஐவர் கடும் போர்புரிந்து நூற்றுவரை அழித்தனர்.

**“பேரமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தேர்**

**ஆராச் செருவின் ஐவர் போல**

**அடங்காத் தானையொடு டுடன்றுமேல் வந்த**

**ஒன்னாத் தெவ்வர் உலைவிடத் தார்த்துக்**

**கச்சி யோனே கைவண் தோன்றல்” (பெரும் 416 -420)**

பாண்டவர் போல இளந்திரையன் படை வலிமை உடையவன் எதிர்க்கும் பகைவரை வெல்பவன். அதே சமயம் அடைக்கலம் என்று வந்தோரை ஆதரிப்பவன். இத்தகைய பெருமைக்குரியவன் காஞ்சி நகரில் வீற்றியிருக்கும் இளந்திரையன் ஆவான். கடல் கொண்டு வந்து பொருட்களைச் சேர்ப்பது போல திறைப்பொருட்களுடன் பலநாட்டு வேந்தர்கள் அவன் அரண்மனை வாயிலில் வந்து காத்திருப்பர்.

**அரண்மனைச் சிறப்பு**

நாடி வந்தவர்களைப் பாதுகாக்கும் அருள் குணம் உடையவன். அவனை எதிர்போரை போரிட்டு அழிக்கும் வல்லமை கொண்டவன். நட்போடு பழகியவர்களில் செல்வமானது பெருகக் காரணமாக இருந்தவன். அப்படிப்பட்டவனின் அரண்மனை முற்றத்தில் பகைநாட்டு மன்னர்கள் கொண்டு வந்த திறைப்பொருட்கள் உள் வருவதற்காகத் காலம் கிடைக்காமல் குவிந்து இருக்கும் சிறப்பினை உடையது. செங்கோல் ஆட்சி செய்யும் மன்னன் இறைவனுக்கு நிகரானவன் என்ற கருத்திற்கு இவை சான்று எனலாம்.

**புகழ்ந்து பாடல்**

இளந்திரையன் தன்னிடம் யார் வந்து என்ன வேண்டினார்களோ அவர்களுக்கு அப்பொருளைக் கொடுத்து, பிறர் முன்பு கூற வருவதைக் குறிப்பால் உணர்ந்து வழங்கும் மயக்கமற்ற அறிவினை உடையவனாக செம்மையான கொடை உள்ளம் கொண்டவன்.

**"பொறிவரிப் புகர்முதந் தாக்கிய வயமான்**

**கொடுவரிக் குருளை கொளவேட் டாங்கும்**

**புலவர் பூண்கட னாற்றிப் பகைவர்**

**கடிமதி லெறிந்து குடுமி கொள்ளும்"** **(பெரும் - 448-451)**

அவனும் அவனது குடியும் எப்படிப்பட்டது எனில் மதநீரை சொரியும் யானையை தாக்கி அழித்த சிங்கமானது புலிக் குட்டி மேல் பாயநினைப்பது போல, புலவர்களுக்கு கொடை வழங்கிய பின் பகைநாட்டு மன்னர்களை அழித்த சிறப்பினை உடையவன். அதே பகை நாட்டு மன்னன் நட்பு பாராட்ட எண்ணும் போது அதற்கு ஒத்துக் கொள்ளாத இயல்பினை உடைய தொண்டையர்கள் குலத்தில் தோன்றியவன் என்று புகழ் பாடியும் நீ நெடிது வாழ்க! என்று கூறியும் யாழை இனிமையாக வாசித்தல் வேண்டும்.

அவர் புகழைப் பெரிதும் விரும்புவான் பரிசிலரை இனிது வரவேற்பான்.

**"பாசி யன்ன நிகர்வை நீக்கி**

**ஆவியன்ன அவர்நூற் கலிங்கம்**

**இரும்பே ரொக்கலொ பொருங்குட னுடீஇக்"** **(பெரும் -469-47,)**

அதோடு பரிசிலரின் அழுக்கேறிய கிழிந்த ஆடையை அகற்றச் செய்து பாலாவியை ஒத்து விளங்கும் நூலாற் செய்த ஆடைகளைத் தருவான்.

**உபசரிக்கும் முறை**

சமையல் தொழிற் வல்லவன் ஆக்கிய இறைச்சியையும் சோற்றையும் இனிய சுவையுடைய பிற உணவுகளையும் வெள்ளிக்கலன்களிலிட்டு பரிசிலர் பிள்ளைகளிடையே உண்ணச் செய்வான். எவ்வாறெனில்

**"மகமுறை மகமுறை நோக்கி முகணமர்ந்து**

**ஆனா விருப்பிற் நானின் றூட்டி"** **(பெரும் - 478-479)**

தாயானவள் தன்பிள்ளை உணவு உண்பதை பார்த்து ரசிப்பது போல பார்த்துக்கொண்டு எதிரில் நின்று உபசரித்து உண்ணச் செய்வான்.

**பரிசுப் பொருட்கள்**

கார் காலத்தில் மின்னல் தோன்றியது போல விரலி தன் கூந்தலில் சூடும்படி பொன்மாலையையும் பொற்றாமரைப் பூவையும் வழங்குவான்.

**"நூலோர் புகழ்ந்த மாட்சிய மால்கடல்**

**வளைகண் டன்ன வாலுளைப் புரவி**

**துணைபுணர் தொழில நால்குடன் பூட்டி**

**அரித்தேர் நல்கியும் அமையான் செருத் தொலைத்து"** **(பெரும் 487-490)**

மேலும் சங்கின் நிறம் போன்ற வெண்ணிறக் குதிரைகள் பூட்டப்பெற்ற பொன்னால் செய்யப்பட்ட தேரினைத் தருவான். பகைவரிடம் பெற்ற குதிரைகளையும், சேணத்தையும் உடன்சேர்த்துத் தருவான். ஆதலினால் பாணர் தலைவனே! நீ விரைந்து அப்பெரு வள்ளலிடம் சென்று அவன் புகழ் பாடி பயன்பெறுவாயாக என்று பாணனை ஆற்றுப்படுத்துகிறான்.

**வேங்கடமலை**

தாளத்திற்கு ஏற்ப பறவைகள் கிண்ணரம் பாடும், தெய்வங்கள் கோயில் கொள்ளும் மலைச்சாரலை உடையது. பூக்கள் உதிரும் படியாக ஆண் குரங்கு பாயும் தன்மையையுடைய காடுகளைக் கொண்டது.

**"செந்தீப் பேணிய முனிவர் வெண்கோட்டுக்**

**களிறுதறு விரகின் வேட்கும்**

**ஒளிறிலங் கருவிய மழைகிழ வோனே"** **(பெரும் 498-500)**

தவப்பள்ளியில் வேள்வி நடத்துவதும், அருவிகள் நிறைந்திருந்ததுமான வேங்கட மலையினை ஆளும் உரிமை உடையவன் தொண்டைமான் இளந்திரையன். அவனை நாடிச் சென்றால் வறுமையானது நீங்கப் பெறுவாய் என்று தொண்டைமான் இளந்திரையனிடம் பரிசில் பெற்ற பாணன் இளந்திரையனின் நாட்டிற்குச் செல்லும் வழிப்பாதையினை வறுமையின் காரணத்தால் பரிசில் பெறும் பொருட்டு பயணம் மேற்கொண்ட பாணனிடம் எடுத்துக்கூறி ஆற்றுப்படுத்துகிறான்.

**முடிவுரை**

தொண்டைமானிடம் பரிசில் பெற்ற பாணன் பழுத்த மரத்தைத் தேடி அலையும் பறவைகள் போல திரிந்த பாணனை ஆற்றுப்படுத்திய செய்தி பயணத்தின் தொடக்கமாக இருக்கிறது. பாலை நிலத்தில் தொடங்கிய பாணனின் பயணம் தொண்டைமானின் வேங்கட மலையை அடைந்து பரிசில் பெற்றுத் திரும்பி வந்தது வரையான பயணக் குறிப்பைச் சுட்டுவதாக உள்ளது. திட்டமிட்டு பயணத்தை மேற்கொள்ளும் போது அப்பயணத்தில் உண்டாகக் கூடிய நன்மை, தீமைகள் இடையூறுகள் போன்றவற்றை அறிந்து கொண்டு விழிப்புணர்வோடு செயல்படத் துணைசெய்யும். யவனர்கள் தமிழ் நாட்டிற்கு வணிகத்தின் பொருட்டு கடல் கடந்து வந்தனர் என்னும் செய்தி சங்க காலத்தில் கடல் வணிகம் நடைபெற்றதை புலப்படுத்துகிறது. பந்து, கழங்கு போன்ற விளையாட்டுகள் பெண்களின் பொழுதுபோக்காக இருந்துள்ளது என்பதையும் அறியமுடிகிறது.

**துணை நின்ற நூல்கள்**

1. பெ.மாதையன்-இனக்குழு சமுதாயமும் அரசு உருவாக்கமும், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2004.
2. மு.சண்முகம்பிள்ளை-சங்கத் தமிழர் வாழ்வியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2004
3. இளம்பூரணனார்-தொல்காப்பியம், கௌரா பதிப்பகக் குழுமம், சென்னை, 2012
4. அ.கிருட்டிணன்-தமிழர் பண்பாட்டியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1992.
5. மயிலை சீனி .வேங்கடசாமி-சிறுபாணன் சென்ற பெருவழி, Tamil Culture, Vol.IX No.1 January 1961.
6. பொ.வே சோமசுந்தரனார் (உ.ஆ), பெரும்பாணாற்றுப்படை, திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி, 2000

**References**

1. Madhaiyan.P, Inakkuzhu Samuthayamum Arasu Uruvakkamum, Pavai Publications, Chennai, 2004

2. Shanmugampillai.M, Sanga Thamizhar Vazhviyal, Ulaga Thamizharaychi Niruvanam, Chennai, 2004
3. Ilampuranar, Tholkappiyam, Gowra Pathippaga Kuzhumam, Chennai, 2012.
4. Krittinnan. A, Thamizhar Pnapattiyal, Manivasagar Pathippagam, Chennai, 1992.
5. Vengatasami, Mailai Seeni, Sirupanan Senra Peruvazhi, Tamil Culture, Vol.IX No.1 January 1961.
6. Somasundaranar.Po.Ve (Urai Aasiriyar), Perumpanatruppadai, Thirunelveli Saiva Siddhantha Norpathippu Kazhagam, Thirunelveli, 2000.


**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**திலகவதி. அ, சிவபாலன். ம "பெரும்பாணாற்றுப்படையில் பயணக் கூறுகள்"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 3, இதழ் 3, சூலை 2023, பக். 10-21

**Cite this Article in English**

**Thilagavathi. A, Sivabalan M "Travel Components in Perumpanatruppadai"** Pulam: International Journal of Tamilology Studies, Vol.3 Issue 3, July 2023, pp. 10-21